## குடும்ப விளக்கு

புரட்சிக் கவிஞரின் படைப்புகள் பலவற்றினின்றும் வேறுபட்டு அனைத்துக் கவிதைகளிலும் உயர்ந்த நிலையில் அமைந்திருப்பது குடும்ப விளக்கு என்னும் இனிய காப்பியமாகும். இது தமிழிலக்கிய நெறியில் ஒரு புதுநெறியாக அமைந்தது. பழங்காலச் சமுதாயத்தை நினைவுகூர்ந்து எதிர்காலச் சமுதாயம் எவ்வாறிருக்க வேண்டும் என்று கனவு கண்டு இந்நூலினைச் சிறப்புற யாத்துள்ளார்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். தங்கம் – மணவழகு என்னும் நடுத்தர வணிகக் குடும்பத்தினரை மையமாகக் கொண்டு செல்வது குடும்ப விளக்கு. தங்கம் பெயரில் மட்டுமன்றிக் குணத்திலும் இல்லற மாண்பிலும் அருளொழுக்கத்திலும் தங்கமாகவே காட்சி தருபவள்; மணவழகு தங்கத்திற்கு வாய்ந்த தகுதிமிக்க துணைவன். வணிகத்தொழில் புரிபவன்.

தங்கம் வேலைக்காரியின்றிக் குடும்பத்தின் அனைத்து வேலை களையும் அயராது செய்கின்றாள்; மாமன் மாமியின் நன்மதிப்பைப் பெறு கின்றாள். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்றுச் சிறந்த முறையில் அன்பினைச் சொரிகின்றாள்.

வில்லியனூர்ச் செல்வர் மாவரசனாரும் மலர்க்குழலியும் நாவரசும் நகைமுத்தும் தங்கத்தின் வீட்டிற்கு விருந்தினராக வருகின்றனர்; மண வழகன் மகன் வேடப்பனுக்கும் நாவரசின் மகள் நகைமுத்துவுக்கும் காதல் வளர்கின்றது; திருமணத்தில் முடிகின்றது.

திருமணம் தமிழர் முறைப்படி புரட்சித் திருமணத் திட்டப்படி பெரியோர் தலைமையில் நடைபெறுகின்றது. மணம் கொண்ட மக்கள் வள்ளுவர் குறளின் பொருளாய்ந்து வாழ்வில் இன்பம் கொள்கின்றனர்.

வாழ்வின் பயனாக அமிழ்து என்னும் மக்கட்பேறு பெறுகின்றனர். அவர்தம் உயர்நிலை கண்டு முதியோராகிய பெற்றோர் மெத்த மகிழ்ச்சி உறுகின்றனர்.

இந்நூல் **ஒருநாள் நிகழ்ச்சி, விருந்தோம்பல், மக்கட்பேறு, திருமணம், முதியோர் காதல்** என்னும் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

குடும்ப விளக்கு ஒருநாள் நிகழ்ச்சியில் முதற்பதிப்பில் பிரிவுத் தலைப்புகள் இல்லை. ஆனால் ஐந்து பகுதிகளும் சேர்ந்து மொத்தமாக வெளியிடப்பட்ட பதிப்பில்தான் பிரிவுத் தலைப்புகள் இடம்பெறுகின்றன.

குறைந்த கதை மாந்தர்களைக்கொண்டு நிறைந்த வாழ்வைக் காட்டிக் கற்போர் உள்ளத்தில் ஆழமான வாழ்வியலை உணர்த்துகின்ற உயர்ந்த காப்பியம் குடும்பவிளக்கு.

ஐந்து சுடர்களைக் கொண்ட அழகிய குத்து விளக்கினைப்போல ஐந்து பகுதிகளைக் கொண்டதாக விளங்குகிறது **குடும்பவிளக்கு.**

பழந்தமிழர் இல்லற வாழ்வை விளக்கும் ஓவியமாக விளங்குவதும், கவிஞர் கண்ட இலட்சியப் பெண்ணின் மொத்த உருவமாகக் காப்பியத் தலைவி விளங்குவதும் நூலின் பொருட் சிறப்பாகும்.

முதியோர் காதலைப் பற்றி இதுவரை யாரும் சிறப்பாகப் பாடவில்லை. அத்தகைய புதுமையினைக் கொண்டு விளங்குவது இந்நூலின் மற்றொரு சிறப்பாகும். தமிழிலக்கியத்தில் விடப்பட்ட இடம் பாவேந்தரால் முழுமை செய்யப்பெற்றுள்ளது.

குடும்ப விளக்கு தொடர்ந்தாற் போல எழுதப்படாமல் கால இடைவெளிபெற்று எழுதப்பட்டாலும் ஆற்றொழுக்கு நடையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எளிய நடையில் அனைவரும் இன்றியமையாத இல்லற வாழ் வியலைப் புரிந்து கொள்ளும் வண்ணம் கவிதைச் சுவையோடு குடும்ப விளக்கு இயற்றப்பட்டுள்ளது.

குடும்ப விளக்கு தமிழ்க் குடும்பங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் கலங்கரை விளக்கமாகவும் திகழும் நிலைத்த புகழுடைய நூல் என்பதில் ஐயமில்லை.

இக்காப்பியம் வெண்பா 2 - அடிகள் 8ம்; பஃறொடை வெண்பா 4-152 அடி கொண்டு கலிவெண்பா 1-ம் 418 அடிகளும்; நேரிசை ஆசிரியப்பா 25-ம் 753 அடிகளும்; அறுசீர் விருத்தம் 221-ம் 884 அடிகளும் எண்சீர் விருத்தம் 50-ம் 200 அடிகளும் 15 அடிகளைக் கொண்ட 2-இசைப்பாவும் நாலடித்தரவு கொச்சகம் 18-ம் அடிகள் 72-ம், கட்டளைக் கலித்துறை 10-ம் 40 அடிகளும்; வெண்டளையால் வரும்

தாலாட்டு 4-ம் 68 அடிகளும் சிந்து கண்ணிகள் 16-ம், 64 அடிகளும் கொண்டு 353 பாடல்களும், 2675 அடிகளால் கொண்டதுமாகும்.

## இருண்ட வீடு

சமுதாயக் குறைகளைக் கண்டவிடத்து அதை நகைச்சுவை ததும்பக் கிண்டலும் கேலியுமாய்ச் சுட்டிக் காட்டுவதும் நேரிடையாகச் சுட்டிக் காட்டிக் சாட்டையடி கொடுப்பதும் கவிஞருக்குக் கைவந்த கலையாகும். ‘கிண்டல்காரன்’ என்ற புனைபெயரில் எழுதிய கட்டுரைகளும், கதைகளும், துணுக்குகளும் தனிக்கவிதைகளும் இதற்குச் சான்று. அவ்வாறு பாரதிதாசனின் சிறப்பு வாய்ந்த காப்பியத்தில் ஒன்று **இருண்டவீடு.**

கவிஞரின் அங்கதக் காப்பியத்தில் (எள்ளல்) ஒன்றான இருண்ட வீடு கல்வியறிவு இல்லாத குடும்பத்தில் அறியாமை எங்ஙனம் ஆட்சி செலுத்துகிறது என்பதை நகைச்சுவையுடன் சுட்டிக் காட்டுகிறது.

எல்லா நலனும் விளைக்கும் கல்வியறிவு நிறைந்த குடும்ப விளக்கைத் தந்த கவிஞர் இருண்ட வீட்டையும் தந்துள்ளார். இனியவை நாற்பதைக் கண்ட தமிழிலக்கியம் இன்னா நாற்பதைக் கண்டதுபோலக் குடும்பவிளக்குக்கு நேர் எதிர்மறையாக இருண்ட வீடு தோன்றியுள்ளது.

கதிரவன் ஒளிவீசுகின்றான். கட்டிலில் உறங்கும் அவ்வீட்டுத் தலைவியை எழுப்புகிறான். ஆனால் அவள் எழவில்லை. உறங்குகிறாள்.

எண்ணற்ற வேலைக்காரர்கள் அவர்தம் வேலையினைச் செய்கின்றார்கள். பால் கறந்து வைக்கப்படுகிறது. விழித்தெழுந்த பெரிய பையன் பாலைத் தண்ணீரெனப் பல்துலக்கிப் பிட்டைத் தின்று வயிறு வலிக்க ஓடி, மாட்டின் மீது விழுந்து இரண்டு பல்லையும் இழக்கிறான். பல் விழுந்ததற்குச் சாணி ஒத்தடம் தரப்படுகிறது.

இளைய பிள்ளையின் நோய்க்கு வீட்டில் ‘இருளன்’ புகுந்த காரணம் என்று கருதித் தலைவி மந்திரக்காரனை அழைக்கிறாள்; கொண்டவனுக்கு உணவளித்து ஓம்பவில்லை. வேலைக்காரியே உணவளிக்கிறாள். வீட்டின் நிலைமையறிந்த வேலைக்காரர்கள் அவரவர் எண்ணப்படி செயல்படுகின்றனர். கணக்கன் உறங்குகிறான்; வேலைக்காரி விரும்பிய அளவு பால் குடிக்கிறாள். கேட்பாரில்லை.

வந்த விருந்தினனாகிய அண்ணனை ஓம்பாததால் அவர் கடையில் உண்டு வருகிறார். கணவனுக்கும் மனைவிக்கும் வீண் சண்டை மூள்கிறது.

இரவில் திருடன் நுழைகின்றான். சினத்தால் தலைவன் சந்தனக் கல்லையும் முக்காலியையும் வீச மனைவி மக்கள் இறக்கின்றனர். எரிந்த விளக்கும் அணைகிறது. வீடு இருண்ட வீடாகிறது.

இருண்ட வீடு உவமை நயம் நிறைந்தது. கதைமாந்தர் பெயரின்றி உலவுவது. தீய குடும்பம் ஒன்றையே சுட்டிக் காட்டுவதால் பெயர் தேவை யில்லை என்று கருதினார் போலும் ஆசிரியர். விறுவிறுப்பான கதை யமைப்பைக் கொண்டுள்ளது இக்காப்பியம். நகைச்சுவை இந்நூலின் சிறப்பாகும். இந்நூல் ஒரு நகைச்சுவைக் களஞ்சியம் என்பார் டாக்டர் சாலய் இளந்திரையன். **சமுதாயக் குறைநீக்க வந்த ஒரு மருந்திலக் கியம் இருண்ட வீடு** என்பது உண்மையாகும்.

**கல்வியில்லாத வீடு எவ்வாறு இருண்டிருக்கும் என்று காட்டுவது இக்காப்பியத்தின் நோக்கமாகும்.**

கல்வி அறிவில்லாத குடும்பம் இருண்ட வீடு எனப்பட்டது. கல்வி யில்லையேல் அறிவில்லை, ஒழுக்கமில்லை, எதுவுமில்லை. அக் குடும்பத் தினர் அடையத்தக்கது இன்னது என்பதை இந்நூலில் விளக்கியிருக் கிறேன் என்று பாவேந்தர் தன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலின் இறுதியில்

**இல்லார்க்கெல்லாம் ஈண்டுக்**
**கல்விவந் ததுஎனில் கடைத்தேறிற் றுலகே!**

என்று கவிஞர் கூறியுள்ளது 'கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்துவதே இந்நூலின் நோக்கம் என்ற கருத்தை உறுதியாக்கு கிறது. தெளிவுபடுத்துகிறது.

இந்நூல் அகவல், ஆசிரியம் என்றுரைக்கப்படும் நேரிசைப்பா வால் 33 அத்தியாயங்களைக் கொண்ட ஒரே பாட்டு. 780 அடிகளைக் கொண்டது.

**- 1978ஆம் ஆண்டு முனைவர் ச.சு. இளங்கோஅவர்களால்**
**எழுதப்பட்ட "கதைப் பாடல்கள் ஓர் ஆய்வு"**
**எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.**

■ ■ ■

ஏனெனில்,

தலைவனிடம் தலைவி நடந்துகொள்ள வேண்டிய சிலவற்றைத் தலைவன் அன்பு காரணமாகச் சொல்லப் பின்வாங்குவது உண்டு. அவ்வாறே தலைவியும் பின்வாங்குவதுண்டு. அப்படிச் சொல்ல வேண்டிய சிற்சிலவற்றைக் குடும்ப விளக்குச் சொல்லும்!

மிகச் சிறியது, குறள் ஓவியம் குடும்பவிளக்கு; எனினும் இதை உருவாக்கி வெளியிட முன்வந்த தோழர் **பாரதசக்தி நிலையம்** பாலசுப்பிரமணியம் அவர்கட்கு என் நன்றியுரியது.

**– பாரதிதாசன்**

◆ ◆ ◆

## சிறப்புரை

### பண்டித S. ரத்நம் அவர்கள்

புலர்ந்த பொழுதின் புதுமை கண்டேன்
மலர்ந்தது தமிழகம் மகிழ்ந்தனர் தமிழர்
உள்ளிருள் அகற்றி யொள்ளொளி கொளுத்தல்
பிறப்பாற் கவிஞராய்ப் பிறந்தோர் சிலருள்
மேற்றிசை புலவரும் வேற்றுமை யின்றெனப்
போற்றித் துதிக்கும் பொற்பொரு பொருட்சுவை
தழுவக் கலந்த தனிப்பெரு மாலைகள்
செந்தமிழ்த் தாயின் சுந்தரப் புயத்துச்
சூட்டிச் சூட்டிச் சுகம்பெறும் குணத்தன்
இளந்தமிழ் உலகும் உளங்களி கூர
எளிய சொற்களில் விளையும் நலத்தொடு
விற்பன மாகிய கற்பனைத் திறத்தால்
கண்ணெதிர் நிழற்றும் காட்சியிற் காதல்
உன்னிதழ் உணர்வெலாம் ஒருங்குத் திரட்டிக்
**குடும்ப விளக்கெனும்** கோதிலாக் கதையைப்
புதிய முறையில் மதியின் அமுதெனத்
தேக்கிய அன்பொடும் ஆக்கி அளித்தனன்
அவனே,
புதுவை நகரினன் புதுமைக் கருத்தினன்
ஆசையாற் **பாரதிதாசன்** ஆகி
எம்மனத் தொளிரும் செம்மல் தானே.

**பண்டித ரத்நம்**
கல்லல்

## கவிஞர் கருத்து!

சென்ற "குடும்ப விளக்கு" முதற்பகுதியின் கண் நல்லதோர் குடும்பத்தின் ஒருநாள் நிகழ்ச்சி குறிக்கப்பெற்றிருந்தது. ஆயினும் அற்றைநாள் விருந்தினர் வரவில்லை.

* * *

இவ்விரண்டாம் பகுதியின்கண் விருந்து வந்தது குறிக்கப் பெற்றுள்ளது.

* * *

முதற்பகுதியின் நிகழ்ச்சிக்கும், இந்நிகழ்ச்சிக்கும் இடையில் எவ்வளவு நாள் சென்றிருக்கும் எனில் ஏறக்குறைய இரண்டாண்டுகள் என்க. இப்பகுதியில் வீட்டின் முதியோர் தள்ளாமை அடைந் துள்ளனர். குடும்பத் தலைவர்களுக்குத் தம் பிள்ளையின் காதல் உள்ளம் புலனாகிறது.

* * *

இந்நூலை வெளியிட முன்வந்த முல்லைப் பதிப்பகத்தினருக்கு என் நன்றி!

◆ ◆ ◆

## திருமுன் படைத்தல்

இற்றைக்கு முப்பதாண்டின் முன் தொடங்கியே தனித் தமிழில் நூல் எழுதிக் காட்டியும், தனித் தமிழே வேண்டும் எனும் கருத்தை யூட்டியும், வரும் நிறைதமிழ் ஆய்ந்தார் மறைமலையடிகளின் திருமுன் இதைப் படைக்கின்றேன்.

**– பாரதிதாசன்**

## எங்கள் கருத்து!

“குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்”, “நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்” இவை நம் கவிஞரின் கருத்து. இந்தக் கருத்துக்கு எடுத்துக்காட்டாக, கவிஞர் அவர்களின் குடும்பம் முன்னேற்றம் நிறைந்த பல்கலைக் கழகமாக விளங்குகிறது.

‘குடும்ப விளக்கு’ முதற் பகுதி தோன்றுவதற்குக் காரணமே கவிஞர் தம் அருமை மகள் திருமதி சரசுவதிதான்!

முதற் பகுதி குடும்பப் பண்பை விளக்குவது; இந்த இரண்டாம் பகுதியில், விருந்தினர்களை வரவேற்று விருந்தோம்பும் முறையும், இல்லத் தலைவரின் இளமை நினைவுகளும், எதிர்காலத் தலைவனின் காதலும், மற்றும் வாழ்க்கைப் பண்பும் காணப்படுகின்றன. கவிஞரின் கவியமுதைப் பற்றி நாம் சொல்ல வேண்டுவதில்லை! அடுத்து வர இருப்பது “திருமணப் பகுதி”!

குடும்ப விளக்கை இயற்றிய நம் கவிஞர் அவர்களுக்கும், அவர்தம் அருமை மகளார்க்கும் தமிழ்நாட்டினர் சார்பாக நன்றி செலுத்துகிறோம்.

**– முல்லைப் பதிப்பகம்**

வேடப்பன் நகைமுத் தாளின்
நினைவோடு விரைந்து சென்றான்.
வீடப்பு றத்தே தோன்ற
வீட்டுக்குப் பின்புறத்தில்
மாடப்பு றாவைக் கண்டான்
மாமர நீழ லின்கீழ்!
தேடக்கி டைத்த தேஎன்
செல்வமென் றருகிற் சென்றான்.

பழந்தமிழ்ச் சுவடித் தேனைப்
பருகுவாள் எதிரிற் கண்டாள்
இழந்ததன் பெருஞ்செல் வத்தை!
'இறந்தேன் நான் பிறந்தேன்' என்றாள்
'தழைந்தமா மரநி ழற்கீழ்
எனக்கென்றே தனித்தி ருந்தாய்
விழைந்த உன் பெற்றோர் மற்றோர்
வீட்டினில் நலமோ' என்றான்.

'தந்தையார் புதுவை சென்றார்
தாயாரோ அண்டை வீட்டிற்
குந்தியே கதைவ ளர்ப்பார்
குப்பத்துப் பெருமாள் தாத்தா
வந்தனர் அவர்தாம் வீட்டு
வாயிலில் தூங்கு கின்றார்
செந்தமிழ்ப் பள்ளி சென்றார்
சிறியவர்!" ஆத லாலே

"கருமணற் கடலோ ரத்தில்
பிறர்வரக் கண்ட நண்டு
விரைந்தோடு வதுபோல்ஓட
வேண்டிய தில்லை. சும்மா

தமிழ் வாழ்க!

## பதிப்புரை

"குடும்ப விளக்கு" வெளிவந்து தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றது. அதற்கு நேர்மாறாக அமைந்த குடும்பத்தைச் சித்திரித்துக் காட்டுகிறது "இருண்டவீடு."

"இருண்ட வீடு" நகைச்சுவையும் படிப்பினையும் நிறைந்து விளங்குகிறது. கல்வியின் தேவையை எவரும் உணரும்வண்ணம் அமைந்திருக்கிறது.

பாரதிதாசன் நூல்களுக்கு அறிமுகம் வேண்டுவதில்லை; கவிதை விளக்குக்கு விளக்கம் ஏனோ?

எம் நிலையத்தின் இரண்டாம் மலராகத் தமிழர்களுக்கு இந் நூலை அளிக்கின்றோம். சுவை கண்டு இன்புறுக. பாரதிதாசன் அவர்கட்கு உரிமை நல்கியதற்காக நன்றி கூறுகிறோம். நிலைய முன்னேற்றத்திற் கருத்துக் கொண்டு கோனாபட்டுத் தோழர்கள் மு. இராமசாமி, சுப. முருகப்பா ஆகியோருக்கு எங்கள் அன்பு உரியதாகுக!

முத்தமிழ் முழங்குக!

**கோனாபட்டு,**
**25. 3. 44**

**முத்தமிழ் நிலையத்தார்,**
**தமிழ்நாடு.**

## ஆக்கியோன் முன்னுரை

'இருண்ட வீடு', 'குடும்ப விளக்கு' என்னும் நூலுக்கு எதிர் மாறான கருத்தை விளக்குவதாகும். கல்வியில்லாத குடும்பம் இருண்ட வீடு அன்றோ? முத்தமிழ் நிலையம், என் நூற்களை வெளி யிடுவதே நோக்கமாகக் கொண்டு நிறுவப் பெற்றதாகும். என் நூற்கள் அனைத்தையும் அவர்கள் உரிமையுடன் வெளியிடுகிறார்கள் என்பதைச் சொல்லவேண்டுமா? இதுபற்றி நான் நிலையத்தார்க்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன்.

புதுவை, **பாரதிதாசன்**
**24. 3. 44**

## முன்னுரை

**கல்வி அறிவில்லாத குடும்பம் இருண்ட வீடு எனப்பட்டது.**

**கல்வி யில்லையேல் அறிவில்லை; ஒழுக்கமில்லை; எதுவு மில்லை. அக் குடும்பத்தினர் அடையத் தக்கது இன்னது என்பதை இந்நூலில் விளக்கியிருக்கிறேன்.**

**ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வியின் இன்றியமை யாமையை உணர்வதுதான் இதை ஊன்றிப் படிப்பதால் ஏற்படும் பயனாகும்.**

புதுச்சேரி **பாரதிதாசன்**
**9. 12. 1948**

## அத்தியாயம் - 1

**தலைவியின் தூக்கம், பால் கறப்பவன் தவறு,
தலைவனின் சோம்பல்.**

கடலின் மீது கதிரவன் தோன்றிப்
படரும் கதிர்க்கை பாய்ச்சிச் சன்னலின்
வழியே, கட்டிலில் மங்கையை எழுப்பினான்.
விழிதிறந்து மங்கை, மீண்டும் துயின்றாள்.

அப்போது மணியும் ஆறரை ஆனதால்
எப்பொழு தும்போல் இரிசன் என்ற
மாடு கறப்பவன் வந்து கறந்து
பாலொடு செம்பை, மூலையில் கட்டிய
உறியில் வைக்காது-உரலின் அண்டையில்
வைத்துப் போனான், மங்கையின் கணவனோ,
சொத்தைப் பல்லைச் சுரண்டிய படியே
சாய்வுநாற் காலியில் சாய்ந்தி ருந்தான்.

## அத்தியாயம் - 4

**தலைவி எழுந்தாள்; சாணமிட்டாள்; கோலமிட்டாள்;
அவளைக் கண்ட பகலவன் நடுங்கினான்.**

நாயின் அலறல் நற்பசுக் கதறல்
பானையின் படபடா பையனின் ஐயோ-
இத்தனை முழக்கில் ஏந்திழை புரண்டு
பொத்தல் மரத்தின் புழுப்போல் நெளிந்தே
எழுந்தாள். அவளோ, பிழிந்து போட்ட
கருப்பஞ் சக்கையின் கற்றைபோல் இருந்தாள்.
இதுதான் பாதை எனும்உணர் வின்றி
மெதுவாய் அறையினின்று வெளியில் வந்தாள்.
பாதி திறந்த கோதையின் விழியோ
பலகறை நடுவில் பதிந்த கோடுபோல்
தோன்றிற்று! மங்கை தூக்கம் நீங்காது,
ஊன்றும் அடிகள் ஓய்ந்து தள்ளாடினாள்.
உடைந்த பெட்டிமேல் கிடந்த பிட்டைத்
தொடர்ந்துநாய் தின்பதும் தோன்ற வில்லை.
நடந்து சென்றவள் நற்பசு வுக்கெதிர்
கிடந்த சாணியைக் கிளறி எடுத்து
மீந்தபாற் செம்பில் விழுது கரைத்துச்
சாய்ந்து விடாமல் தாழைத் திறந்து
தெருவின் குறட்டில் தெளித்தாள்! அவள்குழல்
முள்ளம் பன்றி முழுதுடல் சிலிர்த்தல் போல்
மேலெழுந்து நின்று விரிந்து கிடந்தது!
வாலிழந்து போன மந்தி முகத்தாள்
கோல மிடவும் குனிந்தாள்; தாமரை
போல எழுதப் போட்ட திட்டம்
சிறிது தவறவே தேய்ந்த துடைப்பம்
அவிழ்ந்து சிதறுமே, அப்படி முடிந்தது!
பொன்நிறக் கதிரொடு போந்த பகலவன்
இந்நில மக்கள்பால் தன் விழி செலுத்தினான்!
கோலம் போட்டவள் கொஞ்சம் நிமிர்ந்தாள்
காலைப் பரிதியின் கண்கள் நடுங்கின!

## அத்தியாயம் - 6

**பிட்டை நாய் தின்றது, மீண்டும் வாங்கிய பிட்டுக்குத் தலைவர் [1]புறப்படுகிறார். புதிய பிட்டை உண்ணப்[2] பையன் உதடு இடந்தரவில்லை.**

அழுமூஞ்சி பிட்டை அணுகினான். நாயும்
நழுவிற்றுப் பிட்டை நன்று தின்று.
தொட்டுச் சுவைக்கப் பிட்டில் லாமையால்
பெரிய பையன் சிறிய நரிபோல்
ஊழ் ஊழ் என்றே ஊளையிட் டிருந்தான்.
வீடு பெருக்கும் வேம்பு வந்தாள்!
சமையல் செய்யும் சங்கிலி வந்தாள்!
கடைக்கென் றமைந்த கணக்கன் வந்தான்!
கூடத்து நடுவில் ஏடு விரித்தே
மறுபடி வாங்கிய வடையையும் பிட்டையும்
சங்கிலி படைத்தாள் தலைவருக் காகவே!
பல்லைச் சுரண்டுவோர் பார்த்தார் அதனை,
மெல்ல எழுந்தார், மெல்ல நடந்தார்.
காலைக் கடனைக் கழிக்கக் கருதினார்.
பிட்டையும் வடையையும் பெட்டியில் குந்திக்
கிட்ட இழுத்தான் கிழிந்தவாய்ப் பெரியவன்.
அவனுடல் கொஞ்சம் அசைந்தது, வாய்எயிறு
கவலை மாட்டின் கழுத்துப் போல
வீங்கி இருந்ததால் வெடுக்கென வலித்தது!
தாங்காது கையால் தடவிப் பார்த்தான்!
நோயும் பெரியவன் நோக்க வில்லை!
வாயில் நுழைய வடைக்கு வழியில்லை!

1. தொடங்குகிறார், 2. தின்னப் – மு.ப.

## அத்தியாயம் - 8

**பிள்ளை நிலைக்குக் காரணம் தோன்றிவிட்டது தலைவிக்கு!**

தந்தியும் ஆணியும் தளர்ந்த யாழ்* போல்
கூடத்து நடுவில் வாடிய சருகுபோல்
பெரியவன் பாயில் சுருண்டு கிடந்தான்.
என்பு முறிந்த வன்புலி யுடம்பைக்
கன்மேல் கிடத்திய காட்சி போல
ஓய்வுடன் தலைவர் காட்சி போல
ஓய்வுடன் தலைவர் ஒருப்பக்கத்தில்
சாய்வுநாற் காலியில் சாய்ந்து கிடந்தார்

வயிற்றின் உப்பலால் வாயிலாக் குழந்தை
உயிரை இழக்க ஒப்பாது கிடந்தது;

நடைவீட் டினிலே கடையின் கணக்கன்
நெடுந் தூக்கத்தில் படிந்து கிடந்தான்
வேலைசெய் வோர்கள் மூலையில் குந்தி
மாலை நேரத்தின் வரவுபார்த் திருந்தனர்.

இல்லத் தலைவி எண்ண லானாள்:
குழந்தை யுடம்பில் கோளா றென்ன?
வளர்க்கும் முறையில் மாற்ற மில்லையே!
களிம்புறு பித்தளை கைப்படக் கைப்பட
விளங்குறும் அதுபோல், வேளை தோறும்
கனிநிகர் உடம்பில் கண்ணை வைத்துப்
பனிபிணி யின்றிப் பார்க்கின் றேனே!

*வீணை – மு.ப.

## அத்தியாயம் - 11

**தலைவர் சாப்பிட முடியவில்லை; இலந்தையூர்க்குப் புறப்பட வேண்டியதாயிற்று.**

சங்கிலி தலைவரைச் சாப்பிட அழைத்தாள்:
அங்கே பசியால் அழியும் தலைவரோ
மெதுவாய் எழுந்தார்; அதே நேரத்தில்
எப்போ தும்போல் இரண்டு பல்லிகள்
பளபள வென்று *பாடவே, தலைவர்
மீண்டும்நாற் காலியில் விசையாய்ச் சாய்ந்தார்.
அந்த நேரம் அங்குநின் றிருந்த
கணக்கன் தலைவரைக் கனிவுடன் அழைத்தே
"இன்று நீங்கள் இலந்தை யூர்க்குச்
சென்று வஞ்சகன் சிற்றம் பலத்தைக்
கண்டு பணத்தைக் கையொடு வாங்கிக்
கொண்டு வருவதாய்க் கூறி னீர்களே!
ஐதராப் பாக்கம் அவன் ஓடிவிட்டால்
பைதரா வழக்கும் பயன்படாதே
பத்துப் பைகள் பறிபோக லாமோ?"
என்று பலவும் எடுத்துச் சொன்னான்!
"நன்று நன்று சென்று நீஒரு
காரைப் பேசிக் கடிதில் கொண்டுவா.
அச்சாரப் பணம் ஐந்துரூ பாய்கொடு.
கடன் பட்டவனைக் கையொடு பிடிக்க
அரச காவலர் அங்கே இருப்பரேல்
ஐந்து ரூபாய் அவரிடம் கொடுத்து
வேண்டிய ஒழுங்குடன் விரைவில் அழைத்துவா"
என்றான் தலைவன்! ஏகினான் கணக்கன்.

---

*பாடத் – மு. ப.

## அடையாளம் - 16

**அண்ணன் தன் பசியைக் கூறினான்; தங்கை அவன் ஏறி வந்த வண்டியை மெச்சுகிறாள்.**

ஆமாம் இந்த அலைச்சலில் உங்களைச்
சாப்பிடும் படியும் சாற்ற வில்லை
என்றாள். வெந்நீர் இருக்குமா என்றான்.
ஆமாம் ஆமாம் அடுப்பில் வெந்நீர்
கொதிக்க வைப்பேன் குளிப்பீர் என்றாள்.
வெற்றிலை கொஞ்சம் வேண்டும் என்றான்.
ஆமாம் ஆமாம் அதையும் மறந்தேன்
என்று கூறி ஈந்தாள் வெற்றிலை.
வெற்றிலை போட்டான். வெறித்துப் பார்த்தான்
சாப்பிடச் சொல்லிக் கூப்பிட வில்லை.
பசியால் அண்ணன் பதைபதைக் கின்றான்;
துடிப்போடு தங்கைபால் சொல்ல லானான்;
விடிய நாலுக்கு வீட்டை விட்டுக்
கிளம்பி னேனா? கிளிய னூரில்
சிற்றுண வுக்குச் சுற்றிப் பார்த்தேன்.
அகப்பட வில்லை; அதற்குள் வண்டியும்
புறப்பட் டதனால் பொசுக்கும் பசியுடன்
ஏறினேன்; இங்கே இழிந்தேன்" என்றான்.
இந்தக் கதையை இயம்பித் தனது
பொறுக்கொணாப் பசியைப் புகன்றான். அவளோ
எங்கள் அண்ணன் ஏறி வந்த
வண்டியே வண்டி வண்டியே வண்டி
என்று வண்டியின் இயல்பைப் பற்றி
எண்ணி மகிழ்ந்தாள்! மண்ணாங் கட்டி!

## அடையாளம் - 18

**மஞ்சள்தாள் திருமணத்தாள்தானே வேறென்ன? ***
**காகிதம் படிக்கையில் தலைவர் வருகிறார்.**

அண்ணனும் தங்கையும் அருகில் நெருங்கியே
பிறந்தஊர்க் கதைகள் பேசலா னார்கள்:
"நமது வீட்டின் நாலாவது வீட்டுக்
கமலத் துக்குக் கண்ணாலம் என்று
காயிதம் வந்தது கண்டீரா?" என்றுதன்
அண்ணனைக் கேட்டாள். அண்ணன் சிரித்துக்
"கமலம் இறந்து கணக்கிலா நாட்கள்
ஆயின" என்றான். அது கேட்டு மங்கை
இல்லை அண்ணா இதோ பாருமென்று
மஞ்சள் உறைக்குள் வந்த அஞ்சலைக்
கொண்டு வந்து கொடுத்தாள்; அதை அவன்
மேலுறை கிழித்து நாலுசொல் படித்தான்.
அதற்குள் காரும் பொதுக்கென்று வந்தது.
வீட்டுத் தலைவர் வீட்டில் நுழைந்தார்.
சாய்வு நாற்காலியில் சலிப்புடன் சாய்ந்தார்.
"ஐதராப் பாக்கம் அவன் போய் விட்டான்.
பணமும் போனது; பற்றாக் குறைக்கோ
இன்று ரூபாய் இருபத் தைந்தும்,
பட்டினி யோடு பறந்து திரிந்த
தொல்லையும் வீணாய்த் தொலைந்தன" என்றார்.
அந்த நேரம் அண்ணன் அங்கே
திருமண அழைப்பை விரைவாய்ப் படித்தான்.

---

*காயிதம் – மு. ப.

ஏட்டினில் இருந்த தென்ன வென்றால்:
"அன்புடை யவரே அவ்வா சாமி
ஐந்து நாளில் ஐதராப் பாக்கம்
போவதாய்த் திட்டம் போட்டிருக் கின்றான்
கடிதம் இதனைக் கண்டவுடனே
வந்தால் தொகையை வட்டியும் முதலுமாய்
வாங்கி விடலாம், வந்து சேரவும்.
அங்கவன் போனபின் இங்குநீர் வருவது
வீணே இங்ஙனம் வீரா சாமி."

# அத்தியாயம் - 20

## தலைவர் கோபித்துக் கொண்டு புறப்படுகிறார்

வீட்டுக் காரர் மேலும் தொடங்கினார்:
இந்தாடி என்றே எடுத்தடி வைத்துப்
பந்தா டிடுவேன் பார்'எனக் குதித்துப்
பல்லைக் கடித்தே பரக்க விழித்தே
கொல்லைக் கோடிக் கோலைத் தேடி
விட்டே னாஎன[1] மீசை முறுக்கிச்
சட்டென இதுதான் தக்க தென்று
துண்டை எடுத்துத் தோளில் போட்டுச்
சுண்டெலி வால்போல் தொங்கும் தலைமயிர்
கோதி நுணாக்காய்க் குடுமி முடித்துக்
காதில் தொங்கும் கடுக்கனைத் துடைத்துச்
"சாப்பிட மாட்டேன் சற்றும் இங்கிரேன்
கூப்பிட நினைத்தால் கொன்று போடுவேன்
இங்கு நான்இரேன் சங்கிலி, தெரிந்ததா!
எங்கே பையன்? இரடா இங்கே.
என்றுகூறி-எங்கே? செருப்பும்?
ஒன்றுதானா? என்றதை அணிந்து,
சென்று பின்பு திரும்பி வந்து
கன்றையும் மாட்டையும் நன்று கருதுநீ
உன்னிடம் குழந்தையை ஒப்பு வித்தேன்[2]
சங்கிலி இன்னும் நான் சாற்றுவ தைக் கேள்;
இப்போ தேநான் இவ்விடம் விட்டுச்
செட்டித் தெருவில் தென்னை மரத்தோ

1. என்று, 2. ஒப்பித்துவிட்டேன் – மு.ப.

## அத்தியாயம் - 24

### இரவு பத்து மணி; தலைவர் திரும்பி வருகிறார்

எண்ணெய் இன்றி இருண்டன விளக்குகள்,
இருண்ட வீட்டில் இருளும் குழந்தையும்
அன்றி, மற்றை யனைவரும் துயின்றனர்.
குற்றுயி ராகக் குழந்தை கிடந்தது.
தூற்றும் பழியை ஏற்க அஞ்சி
நள்ளிரு ளானது பிள்ளை சாகாமல்.
தன்மடி தனிலே தாங்கிக் கிடந்தது.
சரியாய் அப்போது-இரவு பத்துமணி;
தலைவர் திரும்பித் தம்வீடு நோக்கினார்
தலைவா சலில்நாய் தான் வரவேற்றது
வீடு மூடியும் விளக் கவிந் தும் இருட்
காடுபோல் இருப்பது கருதிக் கனைத்தார்.
கனைப்பது கேட்டு மனையாள் வந்து, தாழ்
திறப்பாள் அல்லவா? திறக்கவே யில்லை.
நாயை நோக்கி நவின்றார் தலைவர்
‘நீயேன் தெருவில் நிற்கிறாய்’ என்று
நாய் அது கேட்டு ‘ஞய்ஞய்’ என்றதாம்.
அதற்கும் வழியில்லை அழகிய வீட்டில்.

கதவைத் தட்டினார் கையின் விரலால்!
பதியத் தட்டியும் பார்த்தார் பிறகு!
அழுந்தத் தட்டினார் அங்கை யாலே!
அடித்தார் இடித்தார் படபட வென்றே!
எட்டி உதைத்தார் இருநூறு தடவை!
முதுகைத் திருப்பி முட்டியும் பார்த்தார்!

## அத்தியாயம் - 28

**திருடன் வந்து, அலமாரி திறந்து, தன்செயலை அமைதியோடு செய்கிறான்**

சரியாய் ஒருமணி இரவில் தலைவர்
தூக்கமும் பசியின் துடிப்பும் விழிப்பும்
இரங்கத் தக்கவாய் இருந்தன. தலைவியோ
கனவால் விழிப்பதும் கண்ணயர் வதுமாய்
இருந்தாள். பையன் சொறிவான், தூங்குவான்!
இந்த நிலைமையில் இவர்கள் இருக்கையில்
திருடன் ஒருவன் தெருப் பக்கத்து
மாடிமேல் ஏறி ஆடா தசையாது
முற்றத்து வழியைப் பற்றி இறங்கினான்.
அவனோ கறுப்புடை அரையிற் கட்டிப்
பிறைபோற் கத்தியும் பிடித்தி ருந்தான்!
ஓசை யின்றி உள்ளறை புகுந்தான்.
படர்ந்தெரி விளக்கைப் பளிச்சென்ற வித்தான்!
அலமாரி தன்னை அங்கையால் தடவினான்!
சாவி யில்லை; தாவி நகர்ந்து
தலைவியின் தலைமாடு தடவினான்; இல்லை!
சாய்வுநாற் காலியில் சாய்ந்திருந் தவரின்
அண்டையில் இருந்த குண்டுப் பெட்டிமேல்
இருந்தது சாவி; எடுத்துச் சென்றே
அலமாரி தன்னைக் கிலுக்கென்று திறந்தான்!
வீட்டுநாய் அதனைக் கேட்டுக் குலைத்தது!
தலைவர் விழித்தார். தலைவி விழித்தாள்.
பெரியவன் விழித்தான். தெருவில் தொலைவில்

எதையோ கண்டு பதைத்தது நாய்என்று
மதமத வென்று மல்லாந் திருந்தனர்!
சிறிது நேரம் சென்ற பின்னர்
நிறையப் பணத்தாள் நிறையப் பணங்கள்
போட்டுக் கட்டிய பொத்தற் பைகளைக்
கையில் தூக்கினான் கரிய திருடன்.
பொத்தல் வழியே பொத்தென்று சிற்சில
வெள்ளிக் காசுகள் வீழ்ந்த ஓசை
அனைவர் காதையும் அசைத்த தேனும்
"தலைவர் எதையோ தடவு கின்றார்"
என்று தலைவி எண்ணி யிருந்தாள்
"தலைவி பாக்குத் தடவினாள்" என்று
தலைவர் நினைத்துச் "சரி"என் றிருந்தார்.
பெருச்சாளி என்று பெரியவன் நினைத்தான்.
திருடன் துணியொன்று தேடி, அதிலே
பெரும்பணப் பையைப் பெயர்த்து வைத்துக்
கட்டி இடது கையிற் பிடித்து
வலது கையில் வைத்தான் கத்தியை!

## அத்தியாயம் - 30

**விளையாட்டுத் துப்பாக்கியை மெய்யானதென்று**
**திருடன் நடுங்கினான். ஆனால், பையன்,**
**[1]திருடனை உண்மையுணரச் செய்துவிட்டான்**

அந்த வேளையில் அருமைத் தலைவி
"கள்ளனா" என்று வெள்ளையாய்க் கேட்டாள்.
கள்ளன் அதுகேட்டுக் கதவிற் பதுங்கினான்;
கைத்துப் பாக்கியைக் கண்டு நடுங்கினான்.
"என்னைச் சுடாதீர்!" என்று கூறிப்
பணத்தைக் கொடுத்துப் பயணப் படவும்
பண்ணினான் முடிவு! பையன் அப்போது
நிலைமை யாவும் நேரில் அறிந்தும்,
பொய்த் துப்பாக்கியை மெய்த்துப் பாக்கி
என்று நினைக்கும் தன்னருந் தந்தையை
மடையன் என்றெண்ணி [2]வாளா யிருந்தான்.
"எடுத்ததை வைத்துப் பிடியடா ஓட்டம்
சுடுவேன் பாரடா சுடுவேன்" என்று
கைத்துப் பாக்கியைக் காட்டினார் தலைவர்.
அதுகேட்டுப் பெரியவன்"அப்பா! அப்பா.
அத்துப் பாக்கி பொய்த் துப்பாக்கி;
தக்கை வெடிப்பது தானே" என்றான்.
திருடனுக்கு அச்சம் தீர்ந்து போயிற்று.
மெதுவாய் நடந்து வெளியிற் செல்கையில்
இதுவா தெருவுக்கு ஏற்ற வழியென்று
திருடன் கேட்டுச் சென்று மறைந்தான்.
திருடன் கையோடு செல்வமும் மறைந்தது.
தலைவியும் பையனும் தலைவர் தாமும்
குலைநடுக் கத்தால் கூவா திருந்தனர்!

1. அவனை – மு. ப. 2. வாளாவிருந்தான் – மு. ப.

# அத்தியாயம் - 32

**பெரிய பையன் இல்லை.**
**அயலார் நலம் விசாரிக்கிறார்கள்.**

குறிதவ றாமல் எறிந்த முக்காலி
பெரியவன் தலைமேல் சரியாய் வீழ்ந்தது.
தலைவர் பின்னும் தாம்விட் டெறிந்த
விறகின் கட்டை வீணே: ஏனெனில்
முன்பே பெரியவன் முடிவை அடைந்தான்!
அறிவிலார் நெஞ்சுபோல் அங்குள விளக்கும்
எண்ணெய் சிறிதும் இல்லா தவிந்தது.
வீட்டின் தலைவர் விளக்கேற்று தற்கு
நெருப்புப் பெட்டியின் இருப்பிடம் அறியாது
அன்பு மனைவியை அழைப்பதா இல்லையா
என்ற நினைப்பில் இருக்கையில், அண்டை
அயலார் தனித்தனி அங்கு வந்தார்கள்.
எதிர்த்த வீட்டான் என்ன வென்றாள்
திருடனா என்றான் சீனன். விளக்கை
ஏற்றச் சொன்னான் எட்டி யப்பன்.
எதிர்த்த வீட்டின் எல்லிக் கிழவி,
குழந்தை உடல்நலம் குன்றி இருந்ததே
இப்போ தெப்படி என்று கேட்டாள்.
விளக்கேற் றும்படி வீட்டுக் காரியை
விளித்தார் தலைவர்: விடையே இல்லை!
என்மேல் வருத்தம் என்று கூறிப்
பின்னர் மகனைப் பேரிட் டழைத்தார்;
ஏதும் பதிலே இல்லை. அவனும்

# அத்தியாயம் - 33

## கல்வியில்லா வீடு இருண்ட வீடு

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க!
படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகா டென்க!
அறிவே கல்வியாம்; அறிவிலாக் குடும்பம்
நெறி காணாது நின்ற படிவிழும்!
சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை, இன்பம்![1]
செல்வம் கடல்போல் சேரினும் என்பயன்?
கல்வி இல்லான் கண்இலான்[2] என்க.
இடிக்குரற் சிங்கநேர் இறையே எனினும்
படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான்!
கல்லான் வலியிலான்; கண்ணிலான்; அவன்பால்
எல்லா நோயும் எப்போது முண்டு.
கற்க எவரும்; எக்குறை நேரினும்
நிற்காது கற்க. நிறைவாழ் வென்பது
கற்கும் விழுக்காடு காணும்; பெண்கள்
கற்க! ஆடவர் கற்க! கல்லார்
முதிய ராயினும் முயல்க கல்வியில்!
எதுபொருள் என்னும் இருவிழி யிலாரும்
படித்தால் அவர்க்குப் பல்விழி கள்வரும்.
ஊமையுங் கற்க ஊமை நிலைபோம்!

1. வித்து விளைப்பதோ விண்ணினும் பெரிதாம்! – மு. ப.
2. இல்லான் – மு. ப.

